# அஞ்சப்ப செட்டிநாடு உணவகம்



சமையல் என்பது ஒரு தனித்துவமான கலை இக்கலையை கற்றுக்கொள்வது சாதாரணமான விடையம் என்று ஒருவர் சொல்லுவாராக இருந்தால் அவர் சமைக்கத்தெரியாதவர் என்ற முடிவுக்கு நாம் வந்துவிடலாம். பொதுவாக ஒரு உண்மையான சமையற் கலைஞனுக்கு பல்வேறு காரணிகளை கட்டுப்படுத்தக்கூடிய கைப்பக்குவம் அனுபவரீதியாக உருவாகின்றது. குறிப்பாக தமிழர்களின் உணவுவகைகளில் இவைபெரும் பங்கு வகிப்பதைக் காணமுடியும். எனவேதான் எமக்கு சமையல் கலைபோன்று சாப்பிடுவதும் ஒரு கலையாகிவிட்டது என்ன வியப்பாக இருக்கிறதா?

சுவையான உணவையோ அல்லது சிறந்த உணவகத்தையோ தெரிவுசெய்வது என்பது இன்றைய காலகட்டத்தில் சாதாரணவிடையமல்ல ஏன் என்றால் ஒருநாள் தரமாக இருக்கும் உணவு அதே உணவகத்தில் மறுநாள் தரமற்றுப் போகிறது. இதன் காரணம் என்ன? சமையற் கலை சரிவரத்தெரியாதவர்களின் கைவண்ணமே இதற்குக்காரணம்.

இவ்வாறாக தரமான சுவையான உணவுவகைகளைப் பரிமாறத் தவறும் உணவகங்களால் வியாபாரத்தில் வெற்றிபெறுவது என்பது முடியாதகாரியம்.

அந்த வகையிலே ஆரம்பித்து மிகக் குறுகிய காலத்தில் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று வெற்றிகரமாக இயங்கிவரும் அஞ்சப்ப செட்டிநாடு உணவகத்தின் வெற்றியின் இரகசியத்தை சற்று அலசிப்பார்க்கச் சென்றிருந்தோம்.

வாசலில் சென்றதும் நீண்டநாள் பிரிந்திருந்த உறவினரை சந்தித்ததுபோன்ற உள்உணர்வை ஏற்படுத்தும் வரவேற்பு. மிகவும் நேர்த்தியாக அழகாக வடிவமைக்கப்பட்ட உட்புறத்தில்

## ஒரு அலசல்

அமரும் போதே மனதில் ஒரு மகிழ்ச்சி அதாவது ஒரு சிறந்த உணவகத்திற்கு இருக்கவேண்டிய அத்தனை குணாம்சங்களையும் அங்கு காணமுடிந்தது. முற்றிலும் வித்தியாசமாக ரொரன்டோவில் எங்கும் பார்க்க

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)





(6 ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதவாறு அழகான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள மிகவும் தரம் வாய்ந்த உணவகம்



சில்வர் பாத்திரங்களில் பரிமாறப்படும் உணவுமுறைகூட தனித்துவமானதாகவே காணப்படுகின்றது. இந்தியாவில் பலவருட சமையற்கலை அனுபவமுள்ள வல்லுனர்களின் கைவண்ணத்தை ஒருமுறை சுவைத்தவர்களால் மறந்துவிடமுடியாது. மிகவும் சுவையான உணவுகளை குறிக்கப்பட்ட நேரத்தில் தயார்ப்படுத்திக்கொடுக்கும் அவர்களின் பாங்கு அற்புதமானது அது மாத்திரமல்ல என்றும் மாறாத சுவை அதைப்பேணும் அவர்களின் கைப்பக்குவத்திற்கு நிகர் ஏதும் இல்லை என்றே கூறலாம் அவ்வளவு சிறப்பான உணவை நம்மவர்கள் மட்டுமல்ல வேற்றின மக்களும் விரும்பி உண்பதை பார்க்கும் போது மிகவும் பெருமையாக இருந்தது.

சீனர்களின் உணவுவகைகளை எல்லோரும் விரும்பி உண்பதை நாம் பார்த்திருக்கிறோம் பாரம்பரிய உணவுப்பழக்கவழக்கம் கொண்டவர்கள் வரிசையில் சீனர்களுக்கு நாமும் நிகரானவர்கள்தான் இருந்தாலும் எம்மால் அந்த அளவு முன்னேறமுடியவில்லை என்றால் அதன் காரணம் என்ன? நாம் எமது உணவுமுறைகளில் அதிக கவனம் செலுத்தாமை தான் என்று கூறமுடியும். இந்தப்பெரும் குறையை நிவர்த்தி செய்துகொண்டிருக்கும் ஓர் உணவகமாகவே அஞ்சப்ப செட்டிநாடு உணவகம் எனது கண்ணுக்குத்தெரிந்தது. நாம் உணவு அருந்தி முடிப்பதற்குள் அங்கே நேற்று நடைபெற்ற வாணிபகானம் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருகைதந்திருந்த பிரபல பின்னணிப்பாடகர் கே. ஜே ஜேசுதாஸ் அவர்கள் அங்கு உணவருந்துவதற்காக வந்திருந்தார் அற்புதமான அந்தப்பாடகனை சந்திக்கும் வாய்ப்பும் எமக்குக் கிடைத்திருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் இவ்வளவு சுவையான உணவு தயாராகும் இடத்தை பார்க்கவேண்டும் என்ற ஆவல் எம்மிடம் ஏற்பட்டது. நிர்வாக இயக்குனர் மார்க்கிடம் அனுமதிபெற்று உள்ளே சென்றோம் அங்கு வெளியில் கண்டதை விட இன்னும் ஒரு மடங்கு அதிகமாகவே ஆச்சரியப்படவேண்டியிருந்தது அதாவது உணவகத்தின் உட்புறத்தை இவ்வளவு அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க முடியுமா என்ற வியப்பை ஏற்படுத்தியது. அங்கு அனைவருமே மிகவும் வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் தமது பணிகளை சிறப்பாகச்செய்துகொண்டிருந்தார்கள் அவர்களின் உடைகள் கூட மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் காணப்பட்டது. அவர்கள் உணவுதயாரிக்கும் விதம் பொருட்களை கையாளும் முறை என்பன அவர்களின் அனுபவத்திற்கு சான்றாக அமைந்திருந்தது. நீண்ட நாட்களின் பின்னர் ஒரு சிறந்த உணவகத்தில் உணவருந்திய சந்தோசத்தோடு விடைபெற்றோம்.

அஞ்சப்ப செட்டிநாடு உணவகம்
Markham & Eglinton சந்திப்பில்
இல. 3090 Eglinton Ave E. இல்
அமைந்திருக்கின்றது.